செய்தி வெளியீடு எண்: 538 நாள்: 27/10/2015

**வடகிழக்கு பருவமழைமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மாநில அவசரக்கட்டுப்பாட்டுமையத்தில் ஆய்வு.**

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள மேலடுக்கு சுழற்சியின் காரணமாக, கடந்த சில நாட்களாக தமிழகம் முழுதும் பரவலாகமழைபெய்துவருகிறது. குறிப்பாக தென்மாவட்டங்களில் கனமழையும் தொடர்ந்து பெய்து வருகிறது. வருவாய்த்துறையின் சார்பில், மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் இன்று (27.10.2015) வருவாய்நிருவாகஆணையர் அலுவலக வளாகத்தில் 24 மணிநேரமும் செயல்படும் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், வருவாய்த்துறைச் செயலாளர் திரு. ஆர். வெங்கடேசன், இ.ஆ.ப.,முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் திருமதி ஆர். லில்லி, இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி இ. சுந்தரவள்ளி, இ.ஆ.ப., உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தென்மாவட்டங்களில் பெய்துள்ள கனமழை மற்றும் இடிமின்னல் காரணமாக, எற்பட்டுள்ள உயிரிழப்புகள், கால்நடைகள் மற்றும் வீடுகள் ஆகியவற்றிற்கான சேதங்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்டுள்ள உடனடி நிவாரண உதவிகள் குறித்தும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள். மேலும், ஓரிருநாட்களில் வடகிழக்கு பருவமழை தொடங்க விருப்பதை முன்னிட்டு, பலமாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தால் எச்சரிக்கப்பட்டுள்ளதால், அதனைக் கருத்தில் கொண்டு, தொடர்புடைய மாவட்டஆட்சியர்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை மேற்கொள்ள ஏதுவாக, அனைத்து மாவட்டஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டஆட்சியர்களின் நேர்முக உதவியாளர்கள் (பொது) பங்கேற்ற ஆய்வுக் கூட்டமானது மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தலைமையில் எழிலகம் வருவாய் கருத்தரங்ககூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 'பருவமழைக் காலங்களில் போர்க்கால அடிப்படையிலான நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், பாதிக்கப்படும் வீடுகள், குடிசைகள், கால்நடைகள்ஆகியவற்றிற்கான இழப்பீடு உதவித்தொகையினை காலதாமதமின்றி விரைந்து வழங்கிட ஆவனசெய்யுமாறு கேட்டுக் கொண்டார். மேலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான இந்த ஆட்சியில் வருவாய்த்துறைக்கு பொற்காலம் என்று கூறினால் அதுமிகையாகாது. அந்த அளவிற்கு அனைத்துத் தரப்பினரையும் கவரும்

விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிடும் திட்டம், மாணவர்களுக்கான அனைத்துவகையான சான்றிதழ்களைதாம் பயிலும் பள்ளியிலேயே வழங்கிடும் திட்டம், உயர்த்தி வழங்கப்பட்டுள்ளஓய்வூதியத்திட்டம், விரைவு பட்டாமாறுதல் திட்டம், உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் பயன்கள்அனைத்தும் உரியநேரத்தில் உரியமக்களை சென்றடைந்திட வேண்டும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி பாரம்பரியம் மிக்க இந்த வருவாய்த்துறைக்கு பெருமையினைசேர்த்திடவேண்டும்’ என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்கள்.

முன்னதாக தலைமைச் செயலகத்தில்நடைபெற்றதுறைத்தலைவர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில், வருவாய்த்துறையின் சார்பில் கடந்த நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு நலத்திட்டங்கள், சட்டப்பேரவையில்மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருவாய்த் துறையின் சார்பில் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் செயல்பாடுகள்மற்றும் கடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தில் வருவாய்த்துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகள் ஆகியன குறித்த ஆய்வுக்கூட்டமும் மாண்புமிகுவருவாய்த்துறைஅமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்வருவாய்த்துறைசெயலாளர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா,இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் திட்டங்கள் ஆணையர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆப., நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் திருமதி இரா. வாசுகி, இ.ஆ.ப., வருவாய் நிருவாக கூடுதல்ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இணைஆணையர் திருமதி ஆர். லில்லி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதன்மைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையருக்காக,

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**